## Year 2021 to 2022

*2 வருட காலமாக..... நாம் COVID-19 செய்தியிலும் சூழ்நிலையிலும் வாழ்கிறோம்.*
*இப்பொழுதோ அதோடு சேர்த்து Variant... என்ற Delta.... Omicron....என்றும் சேர்ந்துள்ளது... .!!*
*விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள், மருத்துவ நிபுனர்கள் மூலம், பலவித கருத்துக்கள் / கண்டுபிடிப்புக்கள்.....*
*மாறுபட்ட கருத்துக்களும், குழப்பங்களும் நிறைந்த விவரங்கள்.*
*என்ன செய்வது? எதை கடைபிடிப்பது? என குழப்பத்தில் ஆழ்த்தும் சூழ்நிலை....*
*பல மருத்துவ நிபுனர்களின் ஆலோசனைப்படி எடுக்கப்படும், அரசாங்க முறைகளை கடைபிடித்து,*
*கூடிய சீக்கிரம் இந்த சூழ்நிலை மாறும் என நம்பிக்கையோடு வாழ்ந்து வருகிறோம்.*
*முகவுறை, பாதுகாப்பான இடைவெளி, முகக்கவசம், கண் பாதுகாப்பு..... தடுப்பூசி... இப்படி பல.....*
*நமது அறிவுக்கும் ஞானத்திற்கும் அப்பாற்பட்ட இந்த சூழ்நிலை......*
*நமது அறிவுக்கு ஒரு எல்லையுண்டு என்பதை இது வலியுறுத்துகிறது....*
*எல்லாம் வல்ல ஆண்டவரிடம் நம்பிக்கை வைப்போம்.*

சங்கீதம் 119:96 / Psalm 119:96

சகல சம்பூரணத்திற்கும் எல்லையைக் கண்டேன்: உம்முடைய கற்பனையோ மகா விஸ்தாரம்.
***இதுவரை*** *ஆண்டவர், நமக்குக் கொடுத்த இந்த ஜீவனுள்ள வாழ்க்கையை நினைத்து,*
*எல்லாம் வல்ல ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு நன்றி சொல்லுவோம்.*

பிரசங்கி/Ecclesiastes 5:19-20

தேவன் ஐசுவரியத்தையும் சம்பத்தையும் எவனுக்குக் கொடுத்திருக்கிறாரோ,
அவன் அதிலே புசிக்கவும், தன் பங்கைப் பெறவும், தன் பிரயாசத்திலே
மகிழ்ச்சியாயிருக்கவும் அவனுக்கு அதிகாரம் அளிப்பது தேவனுடைய அநுக்கிரகம்.
அவனுடைய இருதயத்திலே மகிழும்படி தேவன் அவனுக்கு அநுக்கிரகம்
பண்ணுகிறபடியினால், அவன் தன் ஜீவனுள்ள நாட்களை அதிகமாய் நினையான்.
***இனிவரும்*** *நாட்களின் ஜீவனை பரிபூரணப்படுத்தவும் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளவும்,*
*ஜீவனுள்ள வசனத்தை தயவுசெய்து வாசித்து, தியானித்து. ஆராய்ந்து பாருங்கள்.*

யோவான்/John 5:39

வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று
எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே, என்று இயேசுகிறிஸ்து சொல்கிறார்.
*இன்னும் அதிகமாக ஆண்டவரின் பிரியத்திற்கு கிரியை செய்ய வாஞ்சையோடு முயற்சிப்போம்.*

ரோமர் 12:2 / Romans 12:2

நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும்
பரிபூரணமுமானசித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.

கொலோசெயர்/Colossians 1:19-20

சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும்,
அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி,
பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் கிறிஸ்து மூலமாய்
தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று.

*ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையும் ஆலோசனையும் நம் அனைவருக்கும் அருளி ஆசீர்வதிப்பாராக. ஆமென்.* ✞

(mk269/12.29.21)